# தூதன்

தூதன் - 32 செப்டம்பர் - 2023 தூது - 8

கர்த்தர் சர்வ வல்லவர்... நம்முடைய தேசத்தில்
மகிமை வாசமாயிருக்கும்படி அவருடைய இரட்சிப்பு அவருக்குப்
பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது. சங்கீதம் 85:9




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 04 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 06 |
| செயலர் மடல் | 08 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 10 |
| வாயில் வருவதே தீட்டு | 11 |
| திருச்சபை ஜெபநாள் | 12 |
| வேதவினா போட்டி | 14 |
| Health Tips | 16 |
| Children's Corner | 18 |
| Birthday Celebrants | 21 |
| Wedding Anniversary | 25 |
| ஆராதனை பாடல்கள் | 27 |
| தெரிந்து கொள்வோம் | 28 |
| Lukewarm Christian | 29 |

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும்
என் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கியத்தின் பாதை

இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது. சங்கீதம் 133:1

என் அன்பிற்குரிய இறைமக்களே,

சங்கீதம் 133-ல் நாம் பார்க்கின்ற காரியம் அல்லது செய்தி என்னவென்றால் ஐக்கியம். கிரேக்க வார்த்தை (Henosis) Oneness / Union /Unity என்று பொருள்படும். ஐக்கியம் எனபது நமது விருப்பம்போல் தெரிந்தெடுத்துக் கொள்ளும் ஓர் உரிமையல்ல. கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமையாகும். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து பெந்தெகொஸ்தே நாளில் ஞானஸ்நானம் பெற்றபிறகு விசுவாசிகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்போ.2:42). எந்த ஒரு கிறிஸ்தவனும், யாருடனும் ஐக்கியம் கொள்ளாமல் தனியாகத்தான் இருப்பேன் என்ற மனப்பான்மை உள்ளவனாக இருக்க முடியாது. ஐக்கியத்தில்தான் தேவகிருபையும், தேவ அன்பும் அனுபவிக்கப்படுகிறது, வெளிப்படுகிறது. புதிய ஏற்பாட்டு பரிசுத்தம் ஐக்கியத்தில்தான் அனுபவமாகிறது. எனவேதான் புதிய ஏற்பாட்டு போதனையின் பெரும்பகுதி ஐக்கியத்தையும், மனித உறவுகளையும் பற்றியதாகவே அமைந்துள்ளது. தேவனால் பிறப்பதென்பது, அவருடைய குடும்பத்திற்குள் பிறப்பது என்பதாகும். மற்றவர்கள் எனக்குத் தேவையில்லை, என் தேவனும் நானும் மட்டும் போதும் என்று யாரும் சொல்லமுடியாது.

ஜீவனின் பாதை என்பது ஐக்கியத்தின் பாதையேயாகும். தேவன் நம்முடைய ஜனங்கள் ஒன்று சேர்ந்து வாழவும், உழைக்கவும், தம்மை ஆராதிக்கவும் வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். தனித்து வாழ்வது எளிதானது என்பதால் நாம் சபையில் ஈடுபாடு கொள்ளவேண்டாம் என்று சிலவேளைகளில் எண்ணுகிறோம். ஆனால் தேவனுடைய திட்டத்திலே சுயேச்சை கிறிஸ்தவர்கள் என்று யாருமே கிடையாது. நாம் கிருபை பெற்றுக் கொள்வதற்காக ஒன்றுகூட்டப்பட்டவர்கள். ஐக்கியத்தின் பாதை தரும் ஆசீர்வாதத்தை 133-ம் சங்கீதத்தில் சங்கீதக்காரன் அழகாக வார்ணிக்கிறான்.

சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது என்னும் வாக்கியத்திற்கு ஒரே ஸ்தலத்தில் வாசம் பண்ணுவது என்று பொருள் சொல்லாமல், ஒரே இருதயத்தோடும், ஒரே ஆத்துமாவோடும், ஒரே நோக்கத்தோடும் வாசம்பண்ணுவது என்று பொருள் சொல்லவேண்டும்.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் பிரிந்திருந்தார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் வெவ்வேறு விதமான குறிக்கோள்களும் நோக்கங்களும் இருந்தன. இப்போதோ, அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். உடன்படிக்கை பெட்டி இஸ்ரவேல் தேசத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இங்கு இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் ஒன்றுகூடி வந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தேவனுடைய ஆசாரிப்புக் கூடாரத்திற்கு வரும்போது சந்தோஷமாய் வருகிறார்கள். அவர்களுக்குள் சமாதானம் உண்டாயிருக்கிறது. இதுவரையிலும் பிரிந்திருந்தவர்கள் இப்போது ஒன்றுகூடியிருக்கிறார்கள். தாவீது அவர்களுடைய ஒற்றுமையை பார்த்து மிகவும் சந்தோஷப்படுகிறார். "இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது"சங்கீதம் 133:1 என்று சொல்லுகிறார்.

## ஐக்கியத்தின் அடிப்படை

**1. ஒரே உடன்படிக்கை:** சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுவது அதிக நன்மையானது. அதுவே அதிக இன்பமானது. இது நல்ல தைலத்திற்கும், பணிக்கும் ஒப்பாயிருக்கிறது. கர்த்தர் ஆரோனை தம்முடைய ஆசாரிய ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணுகிறார். மோசே ஆரோனுடைய சிரசின்மேல் நல்ல அபிஷேக தைலத்தை ஊற்றுகிறார். அபிஷேக தைலம் கர்த்தர் சொன்னபிரகாரம் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அபிஷேக தைலத்தைத் திறக்கும்போது அதிலிருந்து எல்லா திசையிலும் நறுமணம் பரவும்.

மோசே அபிஷேக தைலத்தை ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றுகிறார். ஆரோனுக்குப் பின்பு ஆராரியராக அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் சிரசின்மீதும் அபிஷேக தைலம் ஊற்றப்பட்டது. மோசே ஆரோனுடைய சிரசின்மீது அபிஷேக தைலத்தை தாராளமாயும், அதிகமாயும் ஊற்றுகிறார். அது அவருடைய தாடியிலே வழிகிறது. தாடியிலிருந்து அவருடைய அங்கிகளின்மேல் இறங்குகிறது. அது தேவனுடைய ஊழியத்திற்கென்று சுத்திகரிக்கப் பட்டிருக்கிறது (சங்.133:2)

சகோதர சிநேகம் நல்ல அபிஷேக தைலம்போல இருக்கவேண்டும். ஒருமித்து வாசம்பண்ணும் சகோதரர்களுடைய இருதயம் சுத்தமாயிருக்க வேண்டும். அவர்களுடைய அன்பும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். அவர்களுடைய சகோதர அன்பு தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாய் இருக்கவேண்டும். தேவன் பரிசுத்தமான அன்பை கனம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்து மனுக்குலத்தில் அன்பு கூர்ந்தார். கிறிஸ்துவின் அன்பு சந்தோஷமான தைலத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

ஐக்கியம் என்பது தேவன் தனது ஜனங்கள்மேல் பொழியும் ஆசீர்வாதமாகும். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் சீஷர்களை எல்லாப் பாவத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும் சுத்திகரித்து அவர்கள் மத்தியில் ஒருமனப்பாட்டை உருவாக்கினார். கிறிஸ்துவினுடைய சரீரம் என்ற ஐக்கியத்திற்குள் அவர்கள் அங்கங்களாக இணைக்கப்பட்டார்கள்.

**2. ஒரே ஜீவன்:** அது எர்மோன் மேலும் சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கு ஒப்பாயிருக்கிறது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். இங்கே பனியின் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் நாட்டிலேயே உயர்ந்த மலையான எர்மோன் மலையின் மேலும் மிகச் சிறியதான சீயோன் மலையின் மேலும் பெய்யும் பனி ஒன்றேதான். எர்மோன் மலை அடர் பனிக்கு பெயர்போனது. உயர்ந்ததும் தாழ்ந்ததும் ஒரே மதுர பானத்தைப் பருகுகின்றன. கிறிஸ்துவின் ஜீவனாகிய ஒரே ஜீவனில் பங்குபெறும் நாம் அனைவரும் அவருக்குள் ஒன்றாயிருக்கிறோம்.

இறைமக்களே வேறுபாடின்றி
முனைந்து செயல்படுவோம் - விசுவாசிகளே
பாசக் கரங்களை ஒன்றிணைத்து
நேசக் குமாரன் இயேசுவைப் போல்
உண்மையாய் பிதாவுக்கு பணிபுரியும் - எவரும்
உண்மையில் தேவ குடும்பத்தினர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கனெக்டிகட் என்னும் இடத்தில் ஒரு நீரோடை உண்டு. அதற்கு ஒரு நீண்ட இந்திய பெயருண்டு. அந்த பெயரின் பொருள், உன்னுடைய கரையில் நீ மீன்பிடி, என்னுடைய கரையில் நான் மீன்பிடிப்பேன் என்பதாகும். இதுதான் உலக மக்களின் மனப்பான்மை. அவர்கள் ஒருவரிடம் ஒருவர், நீ உன் வேலையைப் பார் நான் என் வேலையைப் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லுவதுபோல் தோன்றுகிறது. இது சுயநலமான சுதந்தரத்தின் வழி. இன்னொரு மனப்பான்மை என்ன சொல்லுகிறது, நீ உன் வேலையை கவனி, என் வேலையையும் சேர்த்து கவனி. ஏனென்றால் எனக்கு செய்யமுடியாது என்கிறது. இது எதற்கெடுத்தாலும் பிறரையே சார்ந்து வாழும் அடிமைத்தனத்தின் வழியாகும். இவை இரண்டுமே கிறிஸ்தவ மனப்பான்மை அல்ல. ஐக்கியத்தின் பாதை என்பது தன்னலமற்று ஒருவரையொருவர் சார்ந்து வாழுதலின் வழியாகும். நீ என்னுடைய காரியங்களைக் கவனி, நான் உன்னுடைய காரியங்களைக் கவனிக்கிறேன். ஏனென்னறால் நாம் ஒருவருக்கொருவர் அவசியம் என்று இந்த மனப்பான்மை கூறுகிறது. நாம் சகோதரர்கள், சகோதரிகள் என்று உலகை அறிந்து வாழ ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ள சேர்ந்து பணிபுரிய தேவன் நம்மை அழைக்கிறார்.

உங்கள் திருப்பணியில்,
அருள்திரு. மோ. ஐசக் பெர்னாண்டஸ்.
சபை போதகர் / தலைவர்.

# CSI TAMIL PARISH - DUBAI

76th INDEPENDENCE DAY SERVICE







76th INDEPENDENCE DAY SERVICE







## 76th INDEPENDENCE DAY SERVICE







SUMMER CAMP








SUMMER CAMP







SUMMER CAMP







# CSI TAMIL PARISH - DUBAI

SUMMER CAMP








SUMMER CAMP







SUMMER CAMP








## SUMMER CAMP








# CSI TAMIL PARISH - DUBAI

SUMMER CAMP







# ஃபுஜைரா போதகர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால்
என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும்
தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.
2 தீமோத்தேயு 1:7

ஒருவர் இருதய அறுவை சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் இருதயத்தில் துவாரங்கள் இருந்த படியால் அவற்றைச் சரிப்படுத்த அறுவைசிகிச்சை ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாறு அறுவை சிகிச்சை செய்யும்போது சம்பந்தப்பட்ட நபரின் உறவினர்களிடம் இருதய அறுவை சிகிச்சை பற்றிக் கூறி அவர்களுடைய ஒப்புதல் பெறுவது வழக்கம். இந்த அறுவை சிகிச்சை செய்ய சுமார் 5 மணி நேரம் ஆகும். இருதய அறுவை சிகிச்சை ஆரம்பிக்கும் முன்பு செயற்கை இயந்திர இருதயத்தை அறுவை சிகிச்சை செய்து கொள்பவரின் உடலோடு இணைத்து இயங்க வைப்பார்கள்.

அறுவை சிகிச்சை முடிந்து துவாரங்களை சரி படுத்தின பின்பு உண்மையான இருதயத்தை இயங்கும்படி முயற்சி செய்வார்கள். சிலவேளைகளில் இந்த முயற்சியின் போது இதயம் இயங்காமல் செயலற்றுப் போய் விடலாம்.

இப்படி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் தனக்கு மரணம் நேரிடுமோ என்ற பயமும் நடுக்கமும் அதிர்ச்சியும் அடைந்து மனக் குழப்பத்திலும் மூழ்கியிருந்தார்.

இந்த வேளையில் ஆண்டவருடைய ஊழியர் அவரை சந்தித்து அவரை ஊக்குவித்து அவர் உள்ளத்திலிருந்த பயத்தையும் அச்சத்தையும் நீக்கும்படி வேதத்திலிருந்து ஒரு வசனத்தை வாசித்து ஜெபித்தார்.

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

இந்த வசனத்தை வாசித்து ஜெபித்த பின்பு அறுவை சிகிச்சை செய்யப்போகும் நபர் துணிவோடும் தைரியத்தோடும் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். அவருடைய அச்சமும் பயமும் நீங்கியது. அவர் நல்ல சுகத்துடன் வாழ்ந்து வருகிறார்.

பல சமயங்களிலே நாமும் நாளை நடக்கப்போகும் காரியங்களை குறித்த கவலைகளில் மூழ்கி, கவலைகளைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அச்சம் பயம் கலக்கம் போன்றவை நம்மை ஆட்கொண்டு விட ஒருநாளும் அனுமதிக்கக்கூடாது. கடவுளிடம் பெற்றுக் கொண்ட துணிவோடு எல்லாவற்றையும் எதிர்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக கடவுள் நமக்கு பலமுள்ள ஆவியை கொடுத்திருக்கிறார் என்ற நம்பிக்கை வார்த்தையை எந்நாளும் நினைவில் கொள்ள வேண்டும். சங்கீதக்காரன் இவ்வாறாக சொல்கிறான், கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான். சங்கீதம் 118: 6

ஆண்டவர் தாமே இந்த மாதம் முழுவதும் உங்களுக்கு பாதுகாப்பு, பெலன் தந்து ஆசீர்வதித்து வழி நடத்துவாராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்,
அருட்திரு. நத்தானியேல்
சபை போதகர் - ஃபுஜைரா

## NEW MEMBERS LIST

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Akshai Kumar A.G. | 2997 | Dubai |
| 2 | Mr. Jayaraj Immanuel Pandian | 2998 | Dubai |
| 3 | Mr. Prabhu Nirmal | 2999 | Dubai |
| 4 | Mr. Dharani Dharan Gopalakrishnan | 3000 | Dubai |
| 5 | Mr. Jeremiah Johnson | 3001 | Dubai |
| 6 | Mr. Praveen Jebasingh | 3002 | Dubai |
| 7 | Mr. Prasanna Moses | 3003 | Dubai |
| 8 | Mr. Allben Albert | 3004 | Dubai |
| 9 | Mr. J. Sam Albert | 3005 | Dubai |
| 10 | Mr. Solomon Rajesh George | 3006 | Dubai |
| 11 | Mr. Samuel Premkumar | 3007 | Dubai |
| 12 | Mr. Robin Charles Samuel Sornaraj | 3008 | Dubai |
| 13 | Mr. Deepakkumar | 3009 | Dubai |
| 14 | Mr. K. Ebrahim Lazarus | 3010 | Fujairah |
| 15 | Mr. D. Liju | 3011 | Fujairah |
| 16 | Mr. SathishKumar | 3012 | Fujairah |
| 17 | Mr. M. Franklin Abraham | 3013 | Fujairah |
| 18 | Mr. Stanley John | 3014 | Fujairah |

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே,
ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின்
திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.

புதிய மாதத்தில் பிரவேசிக்கின்ற நாம், கடந்து வந்த பாதைகளையும், நம் முன்னோர்களின் பாடுகளையும் திரும்பிப் பார்க்க வேண்டும். குறிப்பாக மணிப்பூரில் துன்பப்படுகின்ற மக்களின் கண்ணீருக்காக வேண்டுதல் செய்ய அழைக்கப்படுகிறோம்.

தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான். வெளிப்படுத்தின விசேஷம் 7:17

கண்ணீர் என்பது மனித வாழ்வின் இன்பத்தையும், துன்பத்தையும் வெளிக்காட்டும் வெளிப்பாடு. வாழ்வின் உட்பகுதியில் அனுபவிக்கும் நிந்தைகள், துக்கங்கள், இயலாமை, இழப்புகள் இவையனைத்தின் வெளிப்பாடாக கண்ணீரை அன்றாட வாழ்வில் பார்க்க இயலுகிறது. திருமறையில் சிலரது வாழ்வின் அனுபவங்களை அடித்தளமாகக் கொண்டு துன்புறும்போது, ஆண்டவர் துன்பத்தை கண்டு பங்குபெறுகிறவராகப் பார்க்கிறோம், கண்ணீரைக் காண்பவர் என்று கற்றுக் கொள்கிறோம்.

### கண்ணீரைக் காண்பவர்: (ஆதி. 21:14-20)

ஆபிரகாமின் அடிமைப்பெண்ணாகிய ஆகாருக்கும், சாராளுக்கும் வாக்குவாதம் வந்தபோது வீட்டை விட்டு ஆகாரை வெளியேற்றும் சூழல் ஆபிரகாமுக்கு ஏற்பட்டது. அப்பத்துடனும், ஒரு துருத்தி தண்ணீருடனும் வெளியேற்றப்பட்டாள். பெயர்செபாவின் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள். துருத்தியில் தண்ணீர் தீர வனாந்தரத்தில் குழந்தையை ஒரு செடியின் கீழ் விட்டாள். கடவுள் குழந்தையின் அழுகுரலைக் கேட்டார். தண்ணீர் துரவைக் காட்டினார். குழந்தைக்கு தண்ணீர் தந்து மரணத்தினின்று பிழைக்கச் செய்தார். இன்றும் அழுகிறவர்களின் கண்ணீரையும், கைவிடப்பட்டவர்களின் அங்கலாய்ப்பையும் கடவுள் காண்கிறார். ஆகவே நாமும் இன்று மணிப்பூரின் கண்ணீரை கண்டு ஆறுதல் அளிக்க அழைக்கிறார்.

### கண்ணீரைக் கணக்கு வைக்கிறார்:

என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது, (சங்கீதம் 56:8) இது தாவீது அரசரின் கண்ணீரின் வார்த்தைகள். எதிரிகளால் நெருக்கப்பட்டபோது உள்ளம் உடைந்து சொன்ன வார்த்தைகள்.

மேலும் சங்கீதம் 42:3 ல் "உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் கண்ணீரே எனக்கு உணவாயிற்று" என்று சந்தித்த நெருக்கங்களைப் பகிர்கிறார். கடவுள் துன்புருகின்றவர்களின் கண்ணீரை கணக்கு வைக்கிறவர் என்ற புதிய அனுபவத்தை தாவீது அரசர் பகிர்கிறார். அழுகையோடும், அங்கலாய்ப்போடும் வாழ்வோரின் அகவாழ்வில் எழும் கேள்விகளுக்கு பதில் தரவும், கண்ணீருக்கு கணக்கு வைத்து பதில் தரவும் கடவுள் வல்லவர்.

### கண்ணீரைத் துடைப்பவர்:

"தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்." வெளிப்படுத்தினவிசேஷம் 7:17

கடவுள் கண்ணீரைத் துடைப்பவர் என்ற இறைவாக்கை, இந்த தீர்க்கதரிசன புத்தகத்தில் வெளிப்படுத்துகிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நாயீன் ஊருக்குச் செல்லும் வழியிலே, தன் மகனை இழந்து கண்ணீரோடு நின்ற விதவையை பார்த்து "அழாதே" என்று சொல்லி, அவள் மகனை உயிரோடு எழுப்பி கண்ணீரைத் துடைப்பதைப் பார்க்கிறோம். லாசரு இறந்துபோனபோது, இயேசு கண்ணீர் விட்டார் என்று பார்க்கிறோம், அது மாத்திரம் அல்ல மார்த்தாள், மரியாளின் கண்ணீரை லாசருவை உயிரோடு எழுப்பி துடைக்கிறார். வரலாற்றில் அடக்கு முறையைச் சந்தித்த இஸ்ரவேல் மக்களின் அழுகுரலைக் கேட்டு, விடுதலை தருகிறார். ஆகவே தான் இங்கே இறைவாக்காகவே அதை உறுதிப்படுத்துகிறார்.

இன்றைக்கும் நம்முடைய வாழ்க்கையில் எதிர்பார்க்காத பாடுகளால், நெருக்கங்களால் கலங்கினாலும், சாவைக் குறித்த பயமும் பதட்டமும் வாட்டினாலும், இல்லாமை, இயலாமை இவைகளால் நொந்து போனாலும் கண்ணீரை களிப்பாய் கடவுள் மாற்றக் காத்திருக்கிறார். இன்றைக்கு மணிப்பூரிலும் நம்முடைய சகோதர, சகோதரிகளின் கண்ணீரை கர்த்தர் துடைக்கக் காத்திருக்கிறார். அவர் மறைந்து நிற்பவர் அல்ல. துன்புறுவோரோடு இணைந்து துன்பத்தை பகிர்ந்து கொள்பவர். ஆகவே நாமும் அவர்களின் கண்ணீர் துடைக்கப்படுவதற்கு தொடர்ந்து மன்றாடுவோம். ஆண்டவர் தாமே அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பாராக. ஆமென்.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
சபை போதகர் - இராஸ் அல் கைமா.

# செயலர் மடல்

பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குச் சமாதானமும், விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகத் தோற்றத்துக்கு முன்னே நம்மை முன்னறிந்த அன்பு - அனாதி தேவ அன்பு. அவர் (தேவன்) முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்த மாறாத அன்பு. தம்மையே நமக்காகத் தந்த தியாக அன்பு. அன்பர் அன்பை, ஆச்சரியமான நேசர் அன்பை, மகா மாட்சிமையான மேலான அன்பை எண்ணி எண்ணி நன்றியுடன் போற்றுவோம். தேவ அன்பின் உயரம், நீளம், அகலம், ஆழம் அளக்கவும் கூடாதே. அன்பரின் பேரன்பை அழகாய் கூறவும் முடியாதே. ஆகாயத்தைத் தாளாக்கினாலும், எழுதித் தீர்க்கவும் போதாதே.

எட்டு மாதங்கள் இமைப்பொழுதில் கடந்து போய்விட்டது. மாறி வரும் உலகில் மாறாத தேவ அன்பை நினைவு கூர்ந்து அன்பில் நிறைந்து - அன்பிலே வேருன்றி - அன்பின் கனிகளால் - அன்பின் கிரியைகளால் - பரிபூரணங்களால் நிறைந்து புதிய மாதத்தில் இறைசித்தம் செய்து திருமறை வழிகளில் திரியேக தேவனைப் போற்றி ஆராதித்து இறைசான்று பகர்வோம். பரிசுத்த அலங்காரத்தோடு கர்த்தரைத் தொழுது மகிழ்வோம்.

கர்த்தருடைய மேலான கிருபையால் கடந்த ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்குப் பின்பு காலை 9:00 மணி முதல் 10:25 மணி வரை Summr Camp ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. Mrs. Diana Spenzer Ruban அவர்கள் பொறுப்பாளராக சிறப்பாக நடத்தினார்கள். அவர்களுக்கும், Summer Camp Teachers, Volunteers மற்றும் பலவிதங்களில் உதவிகள் செய்த, ஊழியங்களுக்காக ஜெபித்த யாவருக்கும் திருச்சபை சார்பாக நன்றி செலுத்துகிறேன். விடுமுறை நாட்களில் தாயகம் சென்று திரும்பிய சபையார், Camp ஊழியத்திற்காக தமிழ், ஆங்கில வேதாகமங்கள் வாங்கி வந்துள்ளார்கள். அவர்களுக்கு சபையின் சார்பாக நன்றியை செலுத்துகிறேன்.

நமது சபையின் Junior Church, Corner Stone, Youth Fellowship, Womens Fellowship, Camp Ministry, Prayer Cell ஊழியங்களுக்காகவும், தாயகத்தில் 100 மிஷனெரிமார்கள், பற்பல ஸ்தாபனங்கள் மூலம் செய்துவரும்

ஊழியங்களுக்காகவும், கொளகூர் மிஷனெரி மருத்துவமனையில் ஆத்தும பாரத்தோடு மருத்துவ பணி செய்துவரும் Dr.Samuel Delightson அவர்கள் குடும்பத்திற்காகவும், மருத்துவ சிகிச்சை பெற வரும் மக்களுக்காகவும், சபை தாங்குகின்ற இதர உதவி பணிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

திருச்சபையின் அங்கீகாரத்திற்காக, CDA மூலம் நாம் திருச்சபையாக ஜெபத்தோடு செய்துவரும் முயற்சிகளை பிரதான மேய்ப்பராகிய நம் கர்த்தராகிய இயேசுதாமே முன்சென்று தடைகளை அகற்றி CDA அதிகாரியின் கண்களில் தயவுபெற கிருபை செய்து Worship License மற்றும் Bank Transaction காரியங்கள் யாவிலும் அனுக்ரகம் செய்வாராக. ஜெபமே ஜெயம்.

வருகிற செப்டம்பர் 10-ம் தேதி ஞாயிறு காலை ஆராதனைக்குப்பின்பு நடைபெற இருக்கின்ற Memory Verse Contest-ல் நம் பிள்ளைகள் யாவரும் பங்குபெற பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்திட அன்புடன் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். அவனவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது. அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. சங்கீதம் 37:31.

இல்லத்தின் தலைவராம் இயேசு, நம் உள்ளத்தின் தலைவராய் எப்போதும் நம்மோடிருந்து குறைவுகளையெல்லாம் மாற்றி நிறைவுகளைத் தந்து நம் யாவரையும் வழிநடத்துவாராக. கர்த்தருக்கே மகிமை.

Praise be to God.

Babu Jeyaseelan, Secretary.

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையின் அங்கத்தினர்
Mr. Suresh அவர்களின் தகப்பனார்
Mr. Prem Kumar அவர்கள் கடந்த 09-07-2023 அன்றும்
நமது சபையின் அங்கத்தினர்கள்
Mrs. Jeba Ravindran, Mr. Francis Jeyapaul, Mrs. Sheeba Prabhakar
அவர்களின் தகப்பனார்
Mr. Francis அவர்கள் கடந்த 26-08-2023 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்." 1கொரிந்தியர் 1:9

தேவனாகிய பிதா
முதலும் முடிவும்
இல்லாத மேலான
இறைவன்.
பேரொளியில்
ஒளிர்பவர்...
எங்கும் நிறைந்தவர்
எல்லாவற்றாலும்
அளவினால்
அளவிட்டுக்கூற
முடியாதவர்...
கர்த்தர் ஒருவரே...
மண், விண், தீ,
நீர், காற்று
கதிரவன், சந்திரன்
சூழ இருந்து
அகண்டமான
வானத்தில்
எல்லாவற்றையும்
கர்த்தர் ஒருவரே
தாங்கி நிற்கிறார்.
எல்லா படைப்பும்
எல்லா பிறப்பும்
கர்த்தர்
ஒருவரிடமிருந்தே
தோன்றும்.
மானிட உடம்புக்கு
மேல் கீழ் என
மெய், வாய், கண்,
மூக்கு, செவி என
ஜீவனை அசைத்து
மூச்சை இயக்கி
உணவை உண்பித்து
உறக்கத்தை
அமையச் செய்வதும்
கர்த்தரே.

கர்த்தரே உலகம்
உலகமே கர்த்தர்.
தேவன் தமது
ஒரே குமாரனை
உலகுக்கு தந்தார்
இயேசு வந்தார்.
சிற்பி சிலையை
வடிவமைப்பது போல்
கர்த்தராகிய இயேசு
மக்களுக்கு
பாவ விமோசனம்
அருளினார்.
தினம் தினம்
இயேசு
அதிசயங்கள்
அற்புதங்கள்
நிகழ்த்தினார்.
மக்கள் வருந்தி
மனம் திருந்தி
இயேசு கிறிஸ்துவை
இரட்சகராகக்
கண்டனர்,
இயேசுவிடம்
தங்களை
ஐக்கியம்
ஆக்கிக்கொண்டனர்.
இரட்சகரின்
அழைப்பு
மக்களை
ஆட்கொண்டது
உலக இரட்சகராக
ஏற்றுக்கொண்டது.
பிதாவாகிய தேவன்
உண்மையுள்ளவர்
சத்தியமானவர்
கர்த்தர் ஒருவரே!!

நாமெல்லாம்
அவர் ஏவலுக்கு
ஆட்பட்ட
கருவிகளே...
இதை
ஒவ்வொருவரும்
உணர்ந்தால்...
பணிவு வராமல்
போகாது
பக்தி உள்ளத்தில்
எழாமல்
இருக்காது
கர்த்தர்
கருத்தாய்
மனதுள்
நிறைந்துவிட்டால்
பூரணமாய்
ஆட்கொண்டு
மாயை போக்கி
மனம் தூய்மையாகும்
மண்ணுயிரை
கரை சேர்க்கும்
பரத்தின்
எல்லையை
எளிதாய்
எட்டுவோம்
இயேசுவின் நாமம்
ஓயாமல்
ஜெபிப்போம்
இயேசுவின் துதியில்
வாழ்நாளை
செலவழிபபோம்.
இயேசுவே
துயர் களைவார்
துணையாக
வருவார்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# வாயில் வருவதே தீட்டு!

ஊழியநாள் ஒன்றிலே
கெனேசரேத் நாட்டிலே
ஏசுவும் தாசரும்
சூழ நின்றதிலே
வேத பாரகரும்
பேத பரிசேயரும்

குழுக்கள் ரெண்டு
கொள்கை ஒன்று
பழக்கம் வேறு
வழக்கத்தில் மண்ணவர்
விளக்கத்தில் விண்ணவர்
மோதலில் செயல்கள்

கழுவாக் கைகள்
உணவோ வாயில்
ஏசு தாசர்கள்
பழக்கப் பார்வையில்
பாரம் பரியர்
பழித்துச் சொல்லல்

வாயுள் போவது
மற்றவரைத் தொடாது
தீட்டும் ஆக்காது
வாயில் புறப்படுவது
இதயம் விட்டு
இதயஞ் சுடுவது

இயேசு பேச
மாசு பூச
இலேசா பின்னே ?
தூசு போல
துடைக்கப் படாதா ?
நேசர் முன்னே !

வசனங் கேட்டு
விசனப் பட்டு
மனசே கெட்டு
திசையை விட்டு
திகைபட்டு பரிசேநர்
வேத பாரகர்

வாய்க்குள் போவது
வயிற்றில் வந்து
தரையில் விழுவது
வாய்க்குள் புறப்படுவது
உணர்வின் திணர்வில்
உலகைக் கெடுப்பது

கைமட்டும் கழுவி
பரிசுத்தம் தழுவி
விடுவது இல்லை
கைக்கொள வேண்டும்
வசனம் கொண்டு
தேவனைக் கண்டு

பொல்லா சிந்தனை
நில்லா தூசணம்
இதய உதயம்
எல்லா மனிதரையும்
நல்லா தாக்கும்
இதயத் துர்க்குணம்

கொலை பாதகங்கள்
தொலைவில் தொலைக்கும்
தேவ தயவையும்
நிலையிலா சுபாவம்
வலையிலே வீழ்த்தும்
பாவ சாபம்

வேரோடு பிடுங்கப்படும்
பரமபிதா நடாத
நாற்றெலாம் என்றார்
தேறாது இதுபோல
பாரம் பரிய
வழக்க மெல்லாம்

குருடருக்கு வழிகாட்டும்
குருடரை விடுங்கள்
கூட்டத்தில் இயேசு
குருடருக்குக் குருடரே
வழிகாட்டி இருவரும்
குழியிலே விழுவார் !

ஆதாரங்கள் : மத்தேயு 15:10-20 கவிதை எண் : 262 ஆக்கம் : மணிமுத்து.

## திருச்சபை ஜெபநாள் 03-09-2023 (முதல் ஞாயிறு)

"என தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." பிலிப்பியர் 4:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

★ கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.

★ தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.

★ திருச்சபையின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார்.

★ October 14-ம் தேதி இராஸ் அல் கைமா கிளைச்சபையிலும், November 12-ம்தேதி துபாய் திருச்சபையிலும், November 26-ம் தேதி ∴புஜைரா கிளைச்சபையிலும் நடைபெற இருக்கும் அறுவடைப் பண்டிகை (Harvest Festival) க்காக ஜெபிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

★ நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,

★ நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,

★ நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,

★ திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,

★ திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

★ சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,

★ நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,

★ தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,

★ கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- ★ இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- ★ அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்து மக்களின் சமாதானத்துக்காக,
- ★ உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக,
- ★ மணிப்பூரில் கர்த்தருடைய கரம் வல்லமையால் இரங்கி, மக்களை தேற்றி வழிநடத்த ஜெபியுங்கள்
- ★ 2024-ம் ஆண்டு நடக்க இருக்கும் தேர்தலுக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- ★ இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக,
- ★ நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- ★ வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- ★ திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக,
- ★ அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- ★ பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- ★ குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- ★ உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- ★ கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ★ கர்த்தர்தாமே யாவரையும் எல்லாவிதமான நோய்களுக்கும் விலக்கி பாதுகாத்து நடத்தவும், புதிய வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் யாவருக்கும் நல்ல வேலைவாய்ப்பைத் தந்து நடத்தவும் ஜெபிப்போம்.
- ★ நடந்து முடிந்த Summer Camp ஊழியத்திற்காக
- ★ நம்முடைய விசுவாச குடும்பங்கள் பயணங்கள் சிறப்பாக இருந்ததற்காக
- ★ CDA அங்கீகாரத்திற்காக, CSI Tamil Parish Dubai தேசத்தில் ஆலயம் எழுப்ப
- ★ நடக்க இருக்கிற SJC ஊழியங்கள் - பிள்ளைகள் ஞானத்திற்காக, பாதுகாப்புக்காக

பாரத்துடன் ஜெபிக்கவும், தனி ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும் தொடர்ந்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(எசேக்கியேல் 11-20)

கீழ்கண்ட வினாக்களுக்கு எசேக்கியேல் 11-20 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. கர்த்தர் எதின் நுனிக்கிளைகளில் ஒன்றை நடுவார்?
2. எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லும்போது எந்த தீர்க்கதரிசி செத்தான்?
3. எந்த மூன்று புருஷர் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள்?
4. கலகவீட்டாரின் நடுவில் தங்கியிருந்தது யார்?
5. காட்டிலிருக்கிற செடிகளுக்குள் மற்ற எல்லா செடிகளிலும் மேன்மையான செடி எது?
6. வட்டிக்கு கொடுத்து பொலிசை வாங்கினால் அவன் என்ன ஆவான்?
7. எருசலேமின் தாய் தகப்பன் யார்?
8. இஸ்ரவேலின் தாய் எப்படிப்பட்டவள்?
9. இஸ்ரவேல் தீர்க்கதரிசிகள் எதற்கு ஒப்பாயிருக்கிறார்கள்?
10. எது எனக்கும் உங்களுக்கும் அடையாளமாய் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்?

## ஜூலை - ஆகஸ்ட் 2023 வேதவினா சரியான பதில்கள்

1. முப்பதாம் வருஷம், நாலாம் மாதம், ஐந்தாம் தேதி எசேக். 1:1
2. பூசியென்னும் ஆசாரியன் எசேக். 1:3
3. இஸ்ரவேல் புத்திரர் எசேக். 2:3
4. புலம்பல், தவிப்பு, ஐயோ எசேக். 2:10
5. புஸ்தகம் எசேக். 3:3
6. இஸ்ரவேல் வம்சத்தார் எசேக். 3:7
7. முன்னூற்றுத் தொண்ணூறு நாட்கள் எசேக். 4:5
8. நாள் ஒன்றுக்கு இருபது சேக்கல் நிறையாயிருக்கும் எசேக். 4:1
9. எருசலேம் நகரத்தை எசேக். 4:1
10. சவரகன் கத்தியாகிய கருக்கான கத்தி எசேக். 5:1
11. இஸ்ரவேல் வம்சத்தார் எசேக். 6:11
12. வெள்ளியும் பொன்னும் எசேக். 7:19
13. இஸ்ரவேலின் மூப்பர் 70 பேர், யசனியா எசேக். 8:11
14. சூரியனை எசேக். 8:16
15. கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தில் எசேக். 9:6

## ஜூலை - ஆகஸ்ட் 2023 வேதவினா போட்டி பதில் எழுதியவர்கள்

1. திருமதி. அனித்தா ஆல்வின்
2. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
3. திருமதி. ஷெர்லி சாம்ராபின்
4. திருமதி. செல்லா ஆலன்
5. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
6. திருமதி. வாலண்டினா செல்லப்பா
7. திருமதி. ஜரிஸ் பொன்கிறிஸ்டோபர்
8. திருமதி. நிர்மலா பேட்ரிக்
9. திருமதி. மெர்லின் விஜில்
10. திருமதி. ரோஸ்லின் இம்மானுவேல்
11. திருமதி. ஜெமிமா கிறிஸ்றோபல் அபிலாஸ்
12. திரு. V. மோகன்
13. திருமதி. லீதியா ஆல்வின்
14. திருமதி. பெமி டார்வின்
15. திருமதி. ஷோபி ராணி ஜெயசேகர்
16. திருமதி. ஷாமினா பென்னி
17. திருமதி. புனிதா தாஸ்
18. திருமதி. இனிதா ஜோனா

## HYPERTENSION (HIGH BLOOD PRESSURE) THE SILENT KILLER

### KNOW MORE ABOUT BLOOD PRESSURE (BP)

**What is Blood Pressure?**

The Pressure exerted by blood moving through your blood vessels.

**What is Normal Blood Pressure?**

- Normal: 120/80 mmHg
- High Normal: 120-139 / 80-89 mmHg
- Hypertension Grade 1 : 140/90 mmHg

**Risk Factors of Hypertension**

- Family History
- Age
- High Salt Intake
- Lack of Exercise
- Obese / Overweight
- Smoking

**If BP is not controlled it may lead to;**

- Stroke
- Heart Failure
- Kidney Disease
- Vision Loss

### STEPS TO CONTROL BP

"By making some life style changes you can control your Blood Pressure"

- Eating healthy foods
- Maintaining healthy body weight
- Stopping or Limiting alcohol intake
- Reducing salt intake in your diet
- Managing Stress
- Exercise Regularly
- No smoking
- Monitor your blood pressure regularly
- Take medicines regularly given by your Doctor

## ESSENTIAL TIPS TO MANAGE DIABETES

| | |
|---|---|
| **Maintain normal Blood Glucose levels**<br>➢ Fasting 80-99 mg/dl<br>➢ Postprandial 80-139 mg/dl<br>➢ HbA1C < 5.7% | **Do a regular urine test** to monitor your kidney functions |
| **Control BP**<br>➢ Systolic < 100mg/dl<br>➢ Diastolic ≤ 80 mmHg | Take care of your eye<br>If you notice sudden mass of floaters in the eye or rapid clouding in vision you should seek urgent advice from an eye doctor |
| **Watch out fat levels**<br>➢ LDL < 100 mg/dl<br>➢ HDL > 40mg/dl<br>➢ Triglycerides < 150mg/dl | Take good care of your teeth<br>Uncontrolled diabetes can affect your gum or teeth. Consult your dentist if your gum is red, swollen, bleeding easily or pulled away consult dentist |
| **Eat healthy diet and exercise regularly**<br>Atleast 30 – 40 minutes free minded brisk walk per day | For women consult your doctor if you are planning to get pregnant. Visit your doctor regularly & take prescribed medication |
| **Maintain healthy weight and BMI**<br>Normal BMI 18.5 to 24.9 | **Look after your feet**<br>Consult doctor if<br>➢ Numbness or tingling<br>➢ Cracks, injury or infections |

By Dr. Benjamin

God was not happy with the way the northern Kingdom of Israel was operating and was letting them create a mess so the people and the kings would end up in captivity. King Shallum sinned against the Lord and led Israel into sin.

*This month kids' corner concentrates on KING SHALLUM (15$^{TH}$ KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL) 2 KINGS 15:8, 10, 13-17. Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*




**LEARN SOMETHING NEW :** The marble slab bore an Aramaic inscription which read, "Here were brought the bones of Uzziah, king of Judah. Do not open. It was rediscovered by E.L Sukenik, professor of archaeology at Hebrew University in Jerusalem, while he was looking at items in the Russian Orthodox monastery on the Mount of Olives.

## GRADE 3 TO GRADE 5 & GRADE 6 TO 8 & GRADE 9 AND ABOVE



1) How long did the dynasty of Shallum lasted?
2) When did King Shallum came to power?
3) Where and who did Menahem kill King Shallum?

4) What action of Menahem shows the depths of brutality?
5) What is the reason behind for his brutal actions?
6) Who became king after King Shallum?
7) As Jesus said, “All who draw the sword will die by the sword” (Matt 26:52). How did Jesus words came true in King Shallum's life?

***Priya Singh (Please send your answer to the pastor by 15th of this month)***

## Answers for the month of July - August 2023 (KING ZECHARIAH 14TH KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL - 2 KINGS 14:29, 15:8-13)

**GRADE 3 TO GRADE 5** 1) 6 months 2) While King Uzziah of Judah was in his 38th year of reign, Zechariah became the king of Israel.
3) Shallum conspired against him. He struck Zechariah and killed him.
4) in front of the people. 5) God had told King Jehu that his 'sons' would be the king for 4 generations and He had kept his promise.

**GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE MIXED BAG :**

1) In the 38th year of king uzziah king of judah, Zechariah came to rule in Israel. (2 KINGS 25:18)



**FILL IN THE BLANKS :** 2) Jehu
3) Zechariah did evil in the sight of the LORD, as his fathers had done. He did not depart from the sins of Jeroboam the son of Nebat, who had made Israel sin. (2 KINGS 15:9)
4) The Shallum the son of Jabesh conspired against him. Shallum struck and killed him in front of the people. Shallum reigned in his place.
5) Bible doesn't mention any descendants for King Zechariah!
6) 4 sons of King Jehu 1) KING JEHOAHAZ (11TH KING OF ISRAEL)
2) KING JEHOASH (12TH KING OF ISRAEL)
3) JEROBOAM II (13TH KING OF ISRAEL)
4) KING ZECHARIAH (14TH KING OF ISRAEL)




7) Because Jehu had obeyed the Lord and destroyed the wicked King Ahab's family. (2 KINGS 9–10) 8) In the 38th year of king Azariah / Uzziah king of Judah, king Zechariah came to rule in Israel. (2 KINGS 15:8)
9) Shallum (2 KINGS 15:11-13) 10) No.

## Last (July - August) months Childrens Corner prize winner

**Correct answer Participants:**

**GRADE 3 TO GRADE 5** 1) Jerwin Jeyakumar 2) Mark 3) Steve 4) Godwin 5) Eric 6) Jonathan Solomon 7) Lydia Abigail Sam Robin 8) Jonathan Calvin 9) Adora Binny 10) Jeholin Victor

**GRADE 6 TO GRADE 8** 1) Jasper Jeyakumar 2) Leonel Sam 3) Tiana 4) Ferwin Martin 5) Jerola Sashya 6) Sarah Arul 7) Trinita 8) Joanna Solomon 9) Katelyn Jolina 10) Lenofa Joy

**GRADE 9 AND ABOVE** 1) Maisie Fedora 2) Caroline Joshna 3) Jerson 4) Hannah Arul 5) Karen Singh 6) Jaymie 7) Jeflin Victo 8) Gracelin Esther 9) Jaymen



# BIRTHDAY CELEBRANTS -SEPTEMBER 2023

**DUBAI**

1 Mr. M.Kanaga Raj
1 Mrs.Thangarani Anandaraj
2 Mr. Deva Thilak Pandian
2 Mr. Andrew Levin Rajkumar
2 Mr. J.Kingston Jose
2 Mrs. Jailin Pearlie Sam Joe Lesly
3 Mr. Jerin Paul Balan
3 Miss Emilia Carol Jackson
3 Mrs. Jamima Christobel Joice Abilash
4 Mr. Jeevin Maxwell
4 Miss. Githika Saloni Ramesh Peter
4 Miss Berlyn John
5 Miss Basil Shallu Rao
6 Mrs. Jessi Ranjith
6 Miss Shamitha Peter Gnanasigamony
7 Mr. B.Arul Raj
7 Miss Juwan Vinish Jebin
8 Miss. Juliana Mary Cornelius
8 Mr. D.David Robinson
8 Master Jayden Titus Andrew Bildass
8 Mr. Iliaraja Chinnathangam
8 Mr. Immanuvel Thangaiah
9 Mrs. Chella Allen
9 Master Kevin Prabu Sutharson Babu
9 Master Ryan Jonathan Rajkumar
9 Miss Bemilin Jini Benniameen
9 Mrs. Persis Suganthy Prabhu
9 Mrs. Lydia Rajathi Alwin John Peter
9 Mr. D. Antony Ananth
9 Mrs. Anusonia Thiyagarajan
9 Mr. Aarone Athisaya Raj
9 Mr. Ault Pringle
10 Miss. Joasiba Jeya Prakash
10 Master Jervin Jeba Robert Jefferson
10 Master Rithish Joel Kanagaraj
10 Master Praheth Lenovan Ponraj
10 Mr. M.Jayalal
11 Mr. D.John
11 Miss Vanna Bernice Olive Sujin
11 Miss Reilyn Isaac
11 Mr. Jayakumar Jayaraj
11 Mr. Arul Prabhu Nath S.
12 Mr. G.Paul
12 Mrs. Shirley Grace Sam Lawrence
12 Mrs. Benitta Godwin
12 Mr. Aswyn Patrick
12 Mrs. Anitha Mary Julian

12 Master Godwin D.Samuel Darwin
12 Master. D.Samraj Daniel Dhinagaran
12 Mr. Derik Paul Frankin
12 Mr. Prasanth Raj Lional Dhas Lional
12 Master Adam Johanna Mangalakaran
13 Mr. Paul Asir Joseph
13 Mr. P.Ravi Samuel
13 Mrs. Selvakumari Sutharson Babu
13 Miss Janice Rula Jacob Samuel
13 Master Brian Lemuel Catherine Simson
13 Miss Thea Roselyn Ajay
14 Mrs. Monisha Abhipray
14 Mr. Annish Caldwel
14 Mrs. Medlin Gracia Divine Christopher
14 Master Ringle Arul Henry E.Jebaraj
14 Mr. S.Jones Samuel Dass
14 Miss Ariana Bibin A
14 Miss Sharon Dominic Sathya
14 Miss Adeline Juana Jerinraj
15 Miss. Anne Isabel Wesly Paul
15 Mr. B.Balin Suresh
15 Master Jeflin Jenkins
15 Mr. B.Anbu Ruban Raja
15 Master Jeevan Davis Andrew
15 Miss Adline Shirley
15 Miss A. Beatrice Ivana Abilash
15 Master. Jeremia Rufus Rukan
16 Mr. Sam Lawgray Lawrence
16 Master Stanly Samuel
16 Mr. John Michael Franklin Earnest
16 Master V.Jarron Christieon Vijiesh
16 Master V.Bestin Yeshua Vijiesh
16 Mrs. Anitha Sadheesh Babu
16 Mrs. Jerifa Vivek Pandian
16 Miss Caralyn Senthivel
17 Mrs. Jeba Ravindran
17 Mr. Nelson Jayakumar Jermiah
17 Master Jeshvin Sam John Selvin
17 Mr. Nithish Peter Gnanasigamony
17 Miss Karlin Nirmal Kumari Johnson
17 Mrs. Brenila Prasad Derek
17 Mr. Antony Lambert Dinakara Raj
18 Mr. S.Masil Raja Dhas
18 Mrs. Jessy Victor Johnraj
19 Master Gerald Asir Moses
19 Mrs. P.R.Shermil Fredita Vijil Singh
19 Miss. Shinulin Olive Gebin J. Oliver
19 Mr. A.Berlin
19 Miss Blesslin Berlin
19 Mr. K.S.Suji Kumar

19 Mrs. Sam Ruby Devapriya Gnana Gandhi
19 Master Luke David Emmanual Manoj Balan
19 Master K.Kathiresan Karuppusamy
20 Miss Blessy M.Davis Jeyakumar
20 Mrs. Maroline Nixon
20 Miss Angeline Jenshine Iwin
20 Mrs. Beryl Milcah Ruban Mathew
21 Mr. Selva Mani
21 Mr. Alexander N
22 Mrs. Sheeba Ranjith Singh
23 Mrs. Manjula Samson
23 Mrs. Ligi Moses
24 Master Nitin Aaron Jeffery
24 Miss. Evangeline Suresh
24 Master Kenneth Paul Giftson Babu
25 Master Jaden Shehan
25 Miss Jeffie Rishona Shajin Joseph
25 Miss Jemimah Adeline Jeyaprakash
25 Mrs. Asha Chinna Rani Jeyaraj
26 Mr. Timothy Tennyson
26 Miss Shalini Prenoliya Jeevaraj
26 Mrs. B.Sarah Jesus
26 Master Jesson Samuel Pravin Jeno
27 Mrs. Rubeena Kevin
27 Mrs. Susan Kiruba Samuel
27 Mr. Suren Nayagam
27 Miss Breana Derek
28 Dr. M.P.Julius
28 Mr. J.Nirmal Singh
28 Master Aastro Julian Nirmal Singh
28 Mr. Sathyanesan Martin
28 Mrs. Elizabeth John Singh
28 Mr. Herold Packiaraj Gunasekar
29 Master Oliver John Michael
29 Miss G. Za Tya Christian
30 Mrs.Bama Earnest
30 Mr.P.Kasi Rajan
30 Master Karsten Das Rajesh
30 Miss Josephien Sofeya James Gnana Prakasam
30 Mr. Arvin Raja S
30 Mr. Anish Samson Nelson
30 Mr. Ezra Jerold J

## FUJAIRAH

2 Miss Ajila Davidson Kingsly
3 Mr. Sam Rohit Edwin
4 Miss Annie Balamurugan
6 Mrs. Bobby Ireen Robin ChandraKumar
7 Mrs. Diana Jason
8 Mrs. Karunyam Barath Kumar

9 Mrs. Baby Juliet Suresh Kumar
9 Master Immanuel Istra Gnana Muthu
10 Master. Carlton Sam Charles
10 Miss. Jomi Johnson
10 Master Manix Bryson Merison
14 Miss Gowsalya Caleb Baskaran
15 Miss. Jisha Jebi Johnson
15 Mr. Benito Johnrose
17 Master Daniel Ebenezer Julion JebaSingh
18 Mrs. Hepziba Vijay Alphons
20 Mrs. Shoba S.Padma
20 Miss. Caroline Danial Abraham
20 Miss Adrina Jeno
22 Master Cyril Jeremiah Prasannaraj
22 Miss Devadarsha Anbu Rajakumar
22 Master Anon Josh Anish
23 Miss Sharon Subiksha Rao
24 Mr. Danesh Yogendra Rao
25 Mr. T.Kishore Jeba Singh
26 Miss Relciya Isravel
28 Mrs. Stella Vijayakumari Prasannaraj
29 Miss Andrea Esther Suresh

## RAS AL KHAIMAH

1 Miss Shephora Arulraj
2 Mrs.Packia Jeyanthy Yesu Nesan
2 Miss Berlin Devora Ebi Paul Raj
2 Master Jivin Austyn Yobu
3 Master. Jehoash Johnson
4 Miss. Caroline Nelson
4 Mr. J.Anish
6 Master Febbin Joshuaraj George Rajasingh
7 Mrs. Ruby Sathya Arul Raj
7 Mr. Daniel Sathiyanathan
8 Mr. Ujinraj Kanakaraj
9 Mr. C. Shyraj
10 Miss. Veronica Nayagam
13 Mr. Kingsly Christhu Rajan
14 Mr. T.Ringletopin
14 Master Chris Templin Chinna Raja
18 Mr. Praveen Prabhu
20 Mr. Benin R
20 Mr. G.Jebaraj Joshua
20 Miss Robheka Rennie Joyson
20 Miss Adlyn Behina Thayal
21 Master J.Jeswin Shalom Jeba Sujin
22 Master Jeffin Sam George Rajasingh
23 Mrs. Jeba Kingsly Dhansingh
25 Mr. R.Anish
28 Miss. Ancy Rajelin David
29 Mrs. F.Karolin Benin
30 Mr.Gibbs Justin

# WEDDING CELEBRANTS - SEPTEMBER 2023

## DUBAI

1 Mr. & Mrs. J.Nirmal Singh
1 Mr. & Mrs. K.Samuel
1 Mr. & Mrs. Prabhu Thomas Gnanamuthu
2 Mr. & Mrs. Peter Henry Albert
2 Mr. & Mrs. A.Enoch Jebaraj
2 Mr. & Mrs. Abeth Siluvairajan
3 Dr. & Mrs. M.P.Julius
3 Mr. & Mrs. Alwyn Jayakumar
3 Mr. & Mrs. D.John
4 Mr. & Mrs. S.Thomas Prabhahar
4 Mr. & Mrs. John Wesly
5 Mr. & Mrs. A.David Paul
6 Mr. & Mrs. S.Jayaraj Sundarsing Thomas
6 Mr. & Mrs. A.George Aldreen
6 Mr. & Mrs. Philip Danisrael
7 Mr. & Mrs. J.Andrus
7 Mr. & Mrs.Vijai Kemil Singh
7 Dr. & Mrs. Micheal Thomas
7 Mr. & Mrs. Samuel Dilton Sasi
9 Mr. & Mrs. M.Kanagaraj
9 Mr. & Mrs. J.Rajendra Prasad
9 Mr. & Mrs. Vijay Singh Sobitha Dhas
10 Dr. & Mrs. Jude Sudhakar
10 Mr. & Mrs. Andrew Jerome Jeeva Kumar
11 Mr. & Mrs. Olive Sujin
11 Mr. & Mrs. Abishek Kaki
12 Mr. & Mrs. H.A.Chellappa
12 Mr. & Mrs. A.Bala Murugan
12 Mr. & Mrs. Merwin Sam Moses
13 Mr. & Mrs. John Jeyapal Jacob
13 Mr. & Mrs. B.Balin Suresh
14 Mr. & Mrs. D.Paulraj
15 Mr. & Mrs. M.Durairaj
16 Mr. & Mrs. J.Jebin Raja Kumar
20 Mr. & Mrs. T.Charles Santha Kumar
22 Mr. & Mrs. David Johnson
22 Mr. & Mrs. James Selvaraj Jebaselvan
23 Mr. & Mrs. J.Jebin
25 Mr.&Mrs. S.Harris Johnson
25 Mr. & Mrs. S.Stephen Mashach

26 Mr. & Mrs. E.Bosco

26 Dr. & Mrs. Cibi Isaac

26 Mr. & Mrs. J.R. Praveen

26 Mr. & Mrs. S. Samuel Dilton

26 Mr. & Mrs. Paul Prasath Gururaj Thomas

26 Mr. & Mrs. Velmurugan .S

28 Mr. & Mrs. Ranjith Raj

29 Mr. & Mrs. J.Julian Sudharshan

29 Mr. & Mrs. Sujil

29 Mr. & Mrs. Sharvin John

## RAS AL KHAIMAH

09 Mr. & Mrs. Yobu Jayachandran

11 Mr. & Mrs. R.Moorthy

## FUJAIRAH

4 Mr. & Mrs. R.Johnny Martin

6 Mr. & Mrs. G.T.Charles

6 Mr. & Mrs. S.Robin Chandra Kumar

9 Mr. & Mrs. Danesh Yogendra Rao

10 Mr. & Mrs. Merison Arputharaj

11 Mr. & Mrs. Selvaraj Louis

15 Mr. & Mrs. Jason

16 Mr. & Mrs. Joselin Arumai Dhas

## திருமறைப் பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2023

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-09-2023 | ஆசிரியர்கள் விடுதலையின் முகவர்கள் | நீதி. 8:1-12 | அப்போ. 8:26-28 | மாற்கு 6:34-44 | 16 |
| 10-09-2023 | பெண்கள் மாற்றத்தை உருவாக்குபவர்கள் | எண்ணா. 27:1-11 | அப்போ. 16:11-15 | லூக்கா 1:46-55 | 119:57-64 |
| 17-09-2023 | சமாதானமும் மோதலுக்கான தீர்வும் | ஆதியா. 13:2-12 | அப்போ. 6:1-6 | மத்தேயு 20:1-16 | 16 |
| 24-09-2023 | முதியோர்களின் பலன் | ஆதியா. 17:1-8 | பிலமோன் 8:1-22 | மத்தேயு 7:13-20 | 92 |

# ஆராதனை பாடல்கள் - செப்டம்பர் 2023

ஆரம்பக்கவி : பாமாலை 113 அருள் நிறைந்தவர்

## 03-09-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 164 | கர்த்தா நீர் வசிக்கும் |
| பாமாலை | 190 | இயேசு எங்கள் மேய்ப்பர் |
| கீர்த்தனை | 169 | எங்கும் புகழ் இயேசு |
| கீர்த்தனை | 35 | சீர் திரி யேக வஸ்தே |
| பாமாலை | 196 | இயேசு கற்பித்தார் |

## 10-09-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 6 | உன்னதம் ஆழம் |
| கீர்த்தனை | 180 | திருமா மறையே அருள்பதியே |
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 134 | தேன் இனிமையிலும் |
| பாமாலை | 168 | பகலோன் கதிர்போலுமே |

## 17-09-2023


| | | |
|---|---|---|
| பாமாலை | 94 | ஆதியில் இருளை |
| பாமாலை | 163 | ஆ சகோதரர் ஒன்றாய் |
| கீர்த்தனை | 98 | மகனே உன் நெஞ்செனக்கு |
| கீர்த்தனை | 146 | பக்தியாய் ஜெபம் பண்ணவே |
| கீர்த்தனை | 32 | மங்களம் சதா |

## 24-09-2023

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் |
| கீர்த்தனை | 167 | சகோதரர்கள் ஒருமித்து |
| பாமாலை | 176 | சாந்த இயேசு ஸ்வாமீ |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் பட |
| கீர்த்தனை | 199 | காப்பார் உன்னை காப்பார் |
| பாமாலை | 131 | பாதை காட்டும் |

# தெரிந்து கொள்வோம்

## பாடல் பிறந்த வரலாறு
## பேராயர் ஹென்றி ஆல்ஃபொர்ட்



பேராயர் ஹென்றி ஆல்ஃபொர்ட் அவர்கள் 1810-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் இங்கிலாந்து நாட்டில், லண்டன் மாநகரில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை திறமையுடன் கற்று, பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இறையியல் கல்வி கற்று, ஆங்கிலத் திருச்சபையில் போதகராகப் பணியாற்றினார்.

1833-ம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள AMPTON என்ற கிராமத்தில் உள்ள ஆலயத்தில் ஆயராக தன் ஊழிய வாழ்வைத் தொடங்கினார். 1867-ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் கன்டர்பரி நகரத்தில் உள்ள பேராலயத்தில் பணியாற்றினார். இந்த பேராலயம் மிகவும் அழகு வாய்ந்தது. ஒருநாள் ஓய்வுநாள் காலை ஆராதனையில் சபையார் எழுந்து நிற்க பாடகர்களும், குருவானவர்களும் பாடல் பாடிக்கொண்டு பவனியாக செல்லும்போது பவனியின் பிண்ணனியில் போதகர் ஆல்ஃபொர்ட் சென்று கொண்டிருந்தார். அவ்வழகிய பேராலயத்தினுள் வெண்ணுடை அணிந்து பாடகர் பவனி செல்வதைக்கண்டு பரவசமடைந்து பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்தைச் சுற்றி தேவதூதர்கள் பாடிக் கொண்டிருக்கும் காட்சியை மனக்கண்களில் கண்டார்.

அன்றைய தினம் ஆராதனைக்குப்பின்பு வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறியபடி ஆயிரக்கணக்காக தேவதூதர்கள் சிங்காசனத்தை சூழ்ந்து பாடிக் கொண்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டு ஒரு பவனி கீதம் எழுத எண்ணம் கொண்டார்.

“மின்னும் வெள்ளங்கி பூண்டு மீட்புற்ற கூட்டத்தார்” என்னும் மோட்ச மகிமையைக் குறித்த பாடலை ஒரு பவனிப்பாடலாக எழுதினார். இப்பாடலுக்கு ஜான் பாக்கஸ் டைக்ஸ் என்னும் சங்கீத நிபுணர் ஒரு அழகிய இராகத்தை அமைத்து அதற்கு ALFORD என பெயரிட்டார். இந்த பாடல் நமது ஆலய ஆராதனைகளில் இந்த ராகத்தில் பாடப்பட்டு வருகிறது. முதன்முதலில் கன்டர்பரி பேராலயத்தில் பாடப்பட்டது.

பேராயர் ஹென்றி ஆல்ஃபொர்ட் அவர்கள் மேலும் பல பாமாலைகளை எழுதினார். 50 கிறிஸ்தவ நூல்களும், கிரேக்க மொழியில் புதிய ஏற்பாட்டைக் குறித்த நான்கு நூல்களும் எழுதினார். சிறந்த கவித்திறனும், சங்கீத ஞானமும், ஓவியத்திறனும் பெற்றார். வேதாகமத்தின் ஆழ்ந்த கருத்துக்களை நன்றாக புரிந்துகொள்வதற்கு பல விளக்க நூல்களையும் எழுதினார்.

பேராயர் ஹென்றி அவர்களின் கடுமையான உழைப்பின் விளைவாக 1870-ம் ஆண்டு உடல்நிலை மிகக்குன்றி 1871-ம் ஆண்டு ஜனவரி 12-ம் நாள் மறுமைக்குட்பட்டார்.


R.ஜெபர்சன்

# Lukewarm Christian

PRIYA SINGH

The word lukewarm means neither hot nor cold. As such, a lukewarm Christian is neither hot nor cold in their faith. They may go to church, but that is more of a check in the box for them and not an act of obedience to God.

A lukewarm Christian is satisfied with simply being able to say they are a Christian. They aren't interested in living out the kind of life Jesus calls us to live.



What Does It Mean To Be Hot or Cold vs a Lukewarm Christian?

### # 1 "CEO" CHRISTIANS

These are the "Christmas and Easter Only Christians. You know, the ones who claim they are a follower of Jesus but only attend church for Christmas and Easter services.

## # 2 FAILS TO DISPLAY ANY PASSION

A lukewarm Christian may go to church but more as a check in the box and not for actually becoming part of the church family.

- A lukewarm Christian doesn't serve at church. Nor do they have any interest in serving others in their community.
- A lukewarm Christian doesn't use his/her gifts to glorify God.

## #3 TO ACCOUNT FOR HIS OR HER ACTIONS :

Although we only need to accept Jesus into our hearts to be saved, we will all have to account for our deeds when we meet our maker.

The Bible actually tells us that, although a saved person will enter the Gates of Heaven, he or she will be judged by God for what we did or didn't do during our time on earth.

If anyone 's work is burned up, he will suffer loss, through he himself will be saved but only as through fire (1 Cor 3:15).

The Bible is quite clear on this topic and how God feels about those who do nothing with the gift of salvation that He gave them.

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - செப்டம்பர் 2023

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1 சாமுவேல் 25 | 1கொரிந். 6 | எசேக். 4 | சங்கீதம் 40,41 |
| 2 | 1 சாமுவேல் 26 | 1கொரிந். 7 | எசேக். 5 | சங்கீதம் 42,43 |
| 3 | 1 சாமுவேல் 27 | 1கொரிந். 8 | எசேக். 6 | சங்கீதம் 44 |
| 4 | 1 சாமுவேல் 28 | 1கொரிந். 9 | எசேக். 7 | சங்கீதம் 45 |
| 5 | 1 சாமு. 29,30 | 1கொரிந். 10 | எசேக். 8 | சங்கீதம் 46,47 |
| 6 | 1 சாமுவேல் 31 | 1கொரிந். 11 | எசேக். 9 | சங்கீதம் 48 |
| 7 | 2 சாமுவேல் 1 | 1கொரிந். 12 | எசேக். 10 | சங்கீதம் 49 |
| 8 | 2 சாமுவேல் 2 | 1கொரிந். 13 | எசேக். 11 | சங்கீதம் 50 |
| 9 | 2 சாமுவேல் 3 | 1கொரிந். 14 | எசேக். 12 | சங்கீதம் 51 |
| 10 | 2 சாமுவேல் 4,5 | 1கொரிந். 15 | எசேக். 13 | சங்கீதம் 52-54 |
| 11 | 2 சாமுவேல் 6 | 1கொரிந். 16 | எசேக். 14 | சங்கீதம் 55 |
| 12 | 2 சாமுவேல் 7 | 2கொரிந். 1 | எசேக். 15 | சங்கீதம் 56,57 |
| 13 | 2 சாமு. 8,9 | 2கொரிந். 2 | எசேக். 16 | சங்கீதம் 58,59 |
| 14 | 2 சாமுவேல் 10 | 2கொரிந். 3 | எசேக். 17 | சங்கீதம் 60,61 |
| 15 | 2 சாமுவேல் 11 | 2கொரிந். 4 | எசேக். 18 | சங்கீதம் 62,63 |
| 16 | 2 சாமுவேல் 12 | 2கொரிந். 5 | எசேக். 19 | சங்கீதம் 64,65 |
| 17 | 2 சாமுவேல் 13 | 2கொரிந். 6 | எசேக். 20 | சங்கீதம் 66,67 |
| 18 | 2 சாமுவேல் 14 | 2கொரிந். 7 | எசேக். 21 | சங்கீதம் 68 |
| 19 | 2 சாமுவேல் 15 | 2கொரிந். 8 | எசேக். 22 | சங்கீதம் 69 |
| 20 | 2 சாமுவேல் 16 | 2கொரிந். 9 | எசேக். 23 | சங்கீதம் 70,71 |
| 21 | 2 சாமுவேல் 17 | 2கொரிந். 10 | எசேக். 24 | சங்கீதம் 72 |
| 22 | 2 சாமுவேல் 18 | 2கொரிந். 11 | எசேக். 25 | சங்கீதம் 73 |
| 23 | 2 சாமுவேல் 19 | 2கொரிந். 12 | எசேக். 26 | சங்கீதம் 74 |
| 24 | 2 சாமுவேல் 20 | 2கொரிந். 13 | எசேக். 27 | சங்கீதம் 75,76 |
| 25 | 2 சாமுவேல் 21 | கலாத். 1 | எசேக். 28 | சங்கீதம் 77 |
| 26 | 2 சாமுவேல் 22 | கலாத். 2 | எசேக். 29 | சங். 78:1-37 |
| 27 | 2 சாமுவேல் 23 | கலாத். 3 | எசேக். 30 | சங். 78:38-72 |
| 28 | 2 சாமுவேல் 24 | கலாத். 4 | எசேக். 31 | சங்கீதம் 79 |
| 29 | 1இராஜா. 1 | கலாத். 5 | எசேக். 32 | சங்கீதம் 80 |
| 30 | 1இராஜா. 2 | கலாத். 6 | எசேக். 33 | சங்கீதம் 81,82 |
| | | | | |